Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 358 | புதன்கிழமை | கார்த்திகை 08 ஆம் நாள் 24 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111



உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர்

## ம.வ.கானமயில்நாதனின் உடல் தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம், நவ. 24
உதயன் - சஞ்சீவி ஸ்தாபக ஆசிரியரும், பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில் 15

---

கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் பெரும் சோகம்

# கவிழ்ந்தது படகுப்பாதை

# மாணவர்கள் உட்பட 6 பேர் சாவு!



- 17 பேர் மீட்பு, எஞ்சியோரைத் தேடும் படலம் தொடர்கிறது
- மேலும் சிலர் கவலைக்கிடம்

திருகோணமலை, நவம்பர் 24
திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணிப் பகுதியில் படகுப்பாதை திடீரெனக் கவிழ்ந்ததால், அதில் பயணித்த பாட சாலை மாணவர்கள் உட்பட 6 பேர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர். 16 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க் கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 15

---

## நினைவேந்தலை தடுக்கமுடியாது

ஊர்காவற்றுறை நீதிமன்றமும் தீர்ப்பு

பொலிஸாரின் கோரிக்கை தள்ளுபடி

யாழ்ப்பாணம், நவ. 24
மாவீரர் தினத்துக்கு தடை உத்தரவு வழங்குமாறு 15

---

## வீதிகளை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, நவ. 24
குறிஞ்சாக்கேணி படகுப்பாதை கவிழ்ந்து 6 பேர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, பொதுமக்கள் வீதிகளில் 15

---

## நவ.27 முழுநாளும் நினைவேந்தலாம்

சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
குறித்த நேரத்தை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல், 15

---

## புலிகளின் தலைவர் போதைப்பொருள் கடத்தினாராம்

வன்மத்தைக் கக்கிய டக்ளஸுக்கு பதிலடி கொடுத்த சிறீதரன்

கொழும்பு, நவ. 24
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், போதைப்பொருள் கடத்தினாரென்று நாடாளுமன்றில் கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளு 15

---

## அதிகாரப் பகிர்வுக்கு அரசு தயாரில்லை

ஐ.நா. உதவிப் பொதுச்செயலரிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 24
'ஒரு நாடு ஒரு சட்டம்' என்பதன்மூலம், அதிகாரப் பகிர்வுக்கு தாம் தயாராக இல்லை என்பதைத்தான் அரசாங்கம் சொல்ல முற்படுகின்றது.
அதேவேளை, சிங்களத் தலைவர்கள் யாரும் அதிகாரப் பகிர்வுக்குத் தயாராக இல்லை. 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்பதன் மூலமாகவும் அர 15

---

## தௌபீக் எம்.பியின் வீடு மீது தாக்குதல்



திருகோணமலை, நவ. 24
படகு விபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வீட்டின் 15

---

## புலிகளின் ஆயுதங்கள் மந்துவிலில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 24
தென்மராட்சி, மந்துவில் வடக்கு ஜே/346 பகுதியில் விடுதலைப் புலிகள் பயன்படுத்தினர் 15

---

## மாவீரர்தின நினைவேந்தலுக்கு சிங்கள மக்கள் எதிர்ப்பில்லை!

சிங்கள அரசியல்வாதிகளே எதிர்க்காதீர்கள்
சிறீதரன் எம்.பி. சபையில் வலியுறுத்து



கொழும்பு, நவம்பர் 24
"மாவீரர்களுக்கான நினைவேந்தலை நடத்துவதற்கு சிங்கள மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதற்கு எதிராக அவர் 11

---

## தான் பிரசவித்த சிசுவை உயிரோடு புதைக்க முயன்ற தாய்!

மட்டுவிலில் சம்பவம்
பேர்த்தியாரும் கைது

கொடிகாமம், நவ. 24
தான் பெற்றெடுத்த குழந்தையைக் குழிதோண்டிப் புதைக்க முற்பட்ட குற்றச்சாட்டில், அந்தக் குழந்தையின் தாயும் பேர்த்தியும் கைதுசெய்யப்பட்ட 14



பூநகரி பிரதேசசபையில்

## தமது கட்சி வரவு - செலவுத்திட்டத்தை தாமே தோற்கடித்த கூட்டமைப்பு

பூநகரி பிரதேசசபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலேயே நேற்று தோற்கடிக்கப்பட்டது.

சபை அமர்வு பூநகரி பிரதேசசபை தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தலைமையில் நேற்றுமுற்பகல் ஆரம்பமானது. இதன்போது வரவு - செலவுத்திட்டம் சபையில் முன்வைக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

11 பேர் கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களில் 10 பேரும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரும் எதிராக வாக்களித்தனர்.

தவிசாளர் மற்றும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இருவரும், ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரும், சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் நால்வரும், ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர். இதனால் குறித்த வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

தவிசாளரை பதவி விலகுமாறு பல தடவைகள் ஆளும் தரப்பினர் கோரிக்கை விடுத்துவந்தனர் என்றும், ஆனால், தவிசாளர் அதற்கு மறுத்துவந்தநிலையில், வரவு - செலவுத்திட்டம் ஆளும் தரப்பினராலேயே தோற்கடிக்கப்பட்டது என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். (த-6)

# இலங்கையின் பாதுகாப்பு புலம்பெயர் தமிழர்களிடம்

*சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு*

**கொழும்பு, நவ. 24**



**புலம்பெயர் தமிழர்களால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியும். எனினும் பயங்கரவாதத் தடைச்சட்டம் அதற்குத் தடையாக உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டமே வெளிநாட்டு முதலீட்டாளர்களைத் தடுக்கின்றது. குறிப்பாக உலகப்பரப்பில் உள்ள ஈழத் தமிழர்கள் சொந்தமண் மீது பற்றுடையவர்கள். அவர்கள் முதலிட வந்தால், கப்பம் கோரப்படுவதும் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு, பயமுறுத்தப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இதுவும் முதலீட்டைத் தடுக்கின்றது.

இலங்கைக்குவரும் சுற்றுலாப் பயணிகளுள் 50 வீதத்துக்கும் மேற்பட்டோர் வடக்கு - கிழக்கில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களாவர். புலம்பெயர் தமிழர்கள் இன்று பொருளாதாரத்தில் பலமாக உள்ளனர். அவர்களால் மட்டும்தான் இலங்கையைக் காப்பாற்ற முடியும் - என்றார். (ம-4-44)

## சந்தையில் கத்திவெட்டு: விரல் துண்டிப்பு

சாவகச்சேரி சந்தையில் ஏற்பட்ட முரண்பாடு கத்தியால் வெட்டும் நிலைமைக்குச் சென்றதால், ஒருவர் படுகாயமடைந்ததோடு, அவரது கை விரலும் துண்டிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம், நேற்றுமாலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சாவகச்சேரி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-20)

வடக்கு ஆளுநரின்

## பொது உறவுகள் இணைப்பாளராக அத்தியட்சகர் கணேசநாதன் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 24

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின், பொது உறவுகள் தொடர்பிலான இணைப்பாளராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.கணேசநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய அவர், மாகாணத்தில் பொதுமக்களுடன் நெருங்கிய உறவை கொண்டுள்ள நிலையிலும், மக்களின் பிரச்சினைகளை மிக நன்கு அறிந்துள்ள நிலையிலும் இவ்வாறு ஆளுநரின் பொதுமக்கள் உறவுகள் தொடர்பிலான இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் ஆளுநர் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தின் குற்றத் தடுப்புப் பிரிவு, போக்குவரத்து தலைமையகம் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தின் முக்கிய பிரிவுகளின் பணிப்பாளராக கடமையாற்றிய அனுபவமிக்க ரி. கணேசநாதன், இறுதியாக வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றியிருந்தார். (த-இ)

## பூநகரி கடலில் சடலம் மீட்பு

கிளிநொச்சி, நவ. 24

பூநகரி - கௌதாரிமுனை கடலில், வலையில் சிக்கியநிலையில் குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் புதிய அந்தோனியார் வீதியைச் சேர்ந்த டன்சன் கனிராஜ் (வயது - 42) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த-6,113)

## தொற்று 740; சாவு 24

கொழும்பு, நவ. 24

நாட்டில் மேலும் 198 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 740 பேர் நேற்று தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அதன்படி, இலங்கையின் மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 58 ஆயிரத்து 860 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி நேற்றுமுன்தினம் 24 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

15 ஆண்களும் 09 பெண்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். அதன்படி கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆயிரத்து 182 ஆக அதிகரித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 20 பேரும், 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 04 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## பேருந்து மோதி மாணவியும் தந்தையாரும் படுகாயம்

யாழ்ப்பாணம் - கொக்குவில், தாவடி சந்தியில் இலக்கத் தகடு அற்ற பேருந்து ஒன்று, மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவியையும் அவரது தந்தையையும் மோதியதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவியும் தந்தையுமே படுகாயமடைந்துள்ளனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-20,27)

கோப்பாய் துயிலுமில்லம் அருகே

## மாவீரர்வார துப்புரவின்போது படையினர் பெரும் இடையூறு

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாக துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் நேற்று நடந்து கொண்டுள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்தை இராணுவத்தினர் இடித்தழித்து, பெரும் இராணுவ முகாம் அமைத்து, நிலை கொண்டுள்ளனர். அதனால் துயிலும் இல்லத்துக்கு முன்பாகவுள்ள தனியார் காணியில் மாவீரர் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றமை வழமையாகும்.

தற்போது மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் அந்தக்காணியின் முன்பக்கமாக வீதியின் இருமருங்கிலும் துப்பரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்போது , கோப்பாய் பொலிஸார் மற்றும் பெருமளவான இராணுவத்தினர் அந்தப்பகுதியில் குவிக்கப்பட்டனர்.

சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் சிலர் தாமும் துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்றோம் என்றுகூறிய வாறு துப்பரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக நடந்துகொண்டனர்.

அதேவேளை, இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக ஒளிப்படம் எடுத்ததுடன் வாகன இலக்கங்களையும் பதிவு செய்தனர். (த-20)

## பொலிஸ் நிலையத்தில் 28 பேருக்கு கொரோனா

இரத்தினபுரி இரக்குவானை பொலிஸ் நிலையத்தில், 28 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கொடகவெல இரக்குவானை பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இரக்குவானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மூலம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் சிறு குற்ற முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-4)

# அரசமைப்பு உருவாக்கம் இரகசியமாக நடக்காது!

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



**கொழும்பு, நவ.24**
**புதிய அரசமைப்புக்கான எந்தவொரு பணியும் இரகசியமான முறையில் இடம்பெறமாட்டாது. வரைவு நகல் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம்வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தின்போது எதிரணியால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் விமர்சனங்களை நாம் செவிமடுத்தோம். விமர்சனங்களில் பெரும்பாலானவை அடிப்படையற்றவை. அநீதியான முறையில் அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

எதிரணியால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களில் எமது பக்கம் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றைச் சரிசெய்துகொள்வதற்கு எந்தநேரத்திலும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

அரசமைப்பு பற்றி கதைக்கப்பட்டது. தற்போது சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுவருகின்றது.

அது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் - கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

எனவே, இது விடயத்தில் இரகசியமாக எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கமாட்டோம். -என்றார். (எ-44)

# மன்னாரில் 26 பேருக்கு கொரோனாத் தொற்று!

மன்னார், நவ.24
மன்னாரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை 26 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மன்னார் பொது மருத்துவமனையில் 13 பேருக்கும், மன்னார் நகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்கும், நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், எருக்கலம்பிட்டி மற்றும் விடத்தல்தீவு மருத்துவமனைகளில் தலா ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் இந்த மாதத்தில் மட்டும் 456 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது (எ-60,56)

# தென்மராட்சியில் ஐவருக்கு தொற்று

சாவகச்சேரி, நவ.24
தென்மராட்சியில் நேற்று தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆசிரியைக்கும், மாணவிக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கல்லூரியின் பிரதி அதிபர் மாரடைப்பால் இறந்த நிலையில், அவரது குடும்பத்தினருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் அவரின் 3 பிள்ளைகளுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிள்ளைகளுடன் தொடர்புகளைப் பேணிய மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் என 54 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் ஆசிரியைக்கும், மாணவிக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-9)

# புதிய அரசமைப்பையும் மீளப்பெறவேண்டிவரும்

## எச்சரிக்கின்றது எதிரணி

கொழும்பு, நவ.24
புதிய அரசமைப்பை இயற்றும் விடயத்தில் வெளிப்படைத்தன்மை அவசியம். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே அதற்கான பணிகள் இடம்பெறவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் புதிய அரசமைப்பையும் மீளப்பெறவேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்படும். இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்படும்பட்சத்தில் அதன் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனம் முழுமையாக பாதுகாக்கப்படவேண்டும். புதிய அரசமைப்பு பற்றிக் கருத்துக்கள் வெளிவந்தாலும் அதை நாம் கண்டதில்லை. புதிய அரசமைப்பை இயற்றும் பணியானது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே முன்னெடுக்கப்பட வேண்டும். சோல்பரியாப்பு, சிறிமா அம்மையாரால் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்பு ஆகியவற்றுக்கான பணிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தற்போது என்ன நடக்கின்றது?, ஜனாதிபதிக்காக வழக்குகளை வாதாடியவர்களை நியமித்து அரசமைப்பைத் தயாரிப்பது சரியா?, இந்த வழிமுறையில் புதிய அரசமைப்பை உருவாக்கினால் அதையும் மீளப்பெற வேண்டிய நிலையே அரசுக்கு ஏற்படும். புதிய அரசமைப்பு தொடர்பில் நிபுணர் குழுவானது எமது கருத்துக்களை கோரி கடிதம் அனுப்பியிருந்தது. 13ஆவது திருத்தச் சட்டத்தை தவிர ஏனைய விடயங்கள் பற்றி கதைக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்படியான குழு எப்படி அரசமைப்பை தயாரிக்கும்?. -என்றார். (எ-44)




**கோ**ப்பாயில நேற்றுக் கொஞ்சம் பிரகண்டம். வழக்கமாய் கோப்பாய் மாவீரர் இல்லத்துக்கு பக்கத்தில உள்ள காணியில முன்னணிக்காரர் மாவீரர்நாளுக்கு விளக்கேத்துறவை. அதால இந்தமுறையும் அதுக்கான ஏற்பாடுகளைச் செய்யிறதுக்கு கஜன் எம்.பி. தலைமையில முன்னணிக்காரர் போனவை. விளக்கேத்துற காணியைச் சிரமதானம் செய்யத் துடங்கிச்சினம். மாவீரர் நாளுக்கு தடை போட நீதிமன்றங்கள் மாட்டன் எண்டு சொன்ன கடுப்பில இருந்த ஆமிக்காரர், உடனேயே விழுந்தடிச்சுக் கொண்டு அந்த இடத்துக்கு வந்திருக்கினம்.

வாயால வெருட்டிப் பாத்தினம். போனில படம் எடுத்துப் பாத்தினம். நிறையப் பேரைக் கொண்டந்து குவிச்சும் பாத்தினம். ஆனால் கஜன் கோஷ்டி அசையேலை. தங்கட பாட்டில சிரமதானத்திலேயே கண்ணாய் இருந்ததால, என்ன செய்யிறதெண்டு ஆமிக்காரருக்குத் தெரியேலை.

அப்பதான் அவைக்கு ஒரு ஐடியா வந்திருக்கோணும். சரி, நாங்க என்ன செய்தாலும் நீங்க சிரமதானம் செய்யப்போறீங்க, அப்படித்தானே? அப்போ நாங்களும் சேர்ந்து செய்யிறம் எண்டு சொல்லியிருக்கினம். ஆமியும் சிரமதானம் செய்யிறதெண்டா வந்தவை தங்களுக்கு கெட்டபேர் எண்டு விட்டிட்டு போடுவினம் எண்டு அவை கணக்குப் போட்டிருக்க வேணும். ஆனால் ஆமியின்ர திட்டம் தெரிஞ்சோ என்னவோ, சரி எங்களைக் குழப்பாம அதையாவது செய்யுங்கோ. மாவீரர்கள் உங்களை மன்னிப்பினம் எண்டு கஜன் கோஷ்டி சொல்லிட்டு பழையபடி சிரமதானத்தில இறங்க, நாலைஞ்சுதரம் மண்வெட்டியை வாங்கிக் கொத்திப்போட்டு, இந்த இராஜதந்திரமும் பலிக்கேலை எண்டு ஆமிக்காரர் போட்டினம்.

இவ்வளவும் நடந்து முடிஞ்சு, என்ன நடந்ததெண்டு வெப்சைட்டுகளிலையும் வந்திட்டு, அதுக்குப் பிறகுதான் சட்டாம்பியாரின் சில செம்புகள் விளையாட்டுக் காட்டத் தொடங்கிச்சினம். ஏதோ ஆமியோட சேர்ந்து முன்னணிக்காரர் சிரமதானம் செய்தமாதிரி , நடந்ததை அப்பிடியே உல்டா பண்ணி எழுதி, தங்கட ஐயா போட்ட எலும்புக்கு வஞ்சகமில்லாமல் பேஸ்புக்கில புகுந்து விளையாடிச்சினம். நூறு நூற்றைம்பது சனத்துக்கு முன்னால நடந்த ஒரு விசயத்தையே, அங்க நேரில கூட போகாம அப்பிடியே தலைகீழா மாத்தி சொல்லுகினம் எண்டால், தங்கட பிழையளையும், அரசாங்கத்தோட சட்டாம்பியார் வாலாட்டுறதையும் எப்பிடியெல்லாம் முட்டுக் குடுத்து கம்பி கட்டுவினம் எண்டு பாருங்கோவன். பொய் சொல்லுறது எண்டது சட்டாம்பியளின்ர குணம் தான். ஆனால் அவிச்ச மீன் துடிக்குது எண்ட மாதிரி சட்டாம்பியின்ர செம்புகள் கூவிறதெல்லாம் வேற லெவல் பாருங்கோ...



- பட்சி

# அதிகரிக்கும் வீதி விபத்துக்கள் வேகத்தைக் கட்டுப்படுத்துங்கள்

*மருத்துவர் சி.யமுனாநந்தா ஆலோசனை*



**யாழ்ப்பாணம், நவ. 24**

**யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதனால் பலர் காயமடைவதுடன், உயிரிழப்பையும் சந்திக்கின்றனர். அநேகமான விபத்துக்கள் வேகமான வாகனச் செலுத்துகை மூலமே இடம்பெறுகின்றன. எனவே வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தி போக்குவரத்தை மேற்கொள்ளவேண்டும் என்று மருத்துவர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணத்தில் போர்க்காலத்தில் இராணுவ வாகனங்களே வேகமாகச் சென்றன. ஆனால் இன்று அரச உயரதிகாரிகளின் வாகனங்களும், யாழ். பல்கலைக்கழக வாகனங்களும், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான வாகனங்களும் வேகமாகச் செல்கின்றன.

இவ்வாறு உயர் அதிகாரம் உள்ள திணைக்கள வாகனங்கள் வீதி விதிகளை மதிக்காது வேகமாகச் செல்வது ஏனைய சாதாரண மக்களையும் வேகமாகச் செல்லத் தூண்டும்.

எனவே எமது பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்கள் தங்கள் வாகனச் சாரதிகளுக்கு வீதியில் வேகக்கட்டுப்பாட்டை எவ்வாறு பேண வேண்டும் என்பதையும், மற்றையவர்களுக்கு எவ்வாறு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதையும் அறிவுறுத்துதல் அவசியம்.

யாழ்ப்பாணத்தின் வீதிகளில் 'அறிவியல்நகர்' என்ற பெயர்ப்பலகையுடன் காலையில் வேகமாகச் செல்லும் பேருந்துகளை நோக்கும்போது, வேகத்தை எங்கே கட்டுப்படுத்துவது என்ற எண்ணம் எழத் தோன்றும்.

எனவே அரச வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டில் முன்மாதிரியாகத் திகழ்ந்து, ஏனையவர்களுக்கு வழிகாட்டல் அவசியம்.

அதேவேளை மருத்துவமனையில் காயமுற்றவர்களுக்கான அவசர சிகிச்சைக்குத் தேவைப்படும் குருதியை வழங்குவதற்கு, எமது பிரதேச இளைஞர்களை ஊக்குவித்தல் அவசியம். அவ்வாறு எமது இளைஞர்கள் குருதிக் கொடை நிகழ்வுகளை ஒழுங்காகச் செய்யும்போது அவர்களிடையே சமூகப்பற்றும், சமூகப்பொறுப்பும் அதிகரிக்கும்.

அவர்கள் வேகமாக வாகனங்களைச் செலுத்தமாட்டார்கள். சமூக வன்முறைகளைக் கட்டுப்படுத்துவர். இதனை சனசமூக நிலையங்கள், மற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்க வேண்டும். - என்றார். (ம-4)

## பெரமுனவின் உறுப்பினர் போதையில் அட்டகாசம்

கொழும்பு,நவ.24

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்வாதியொருவர், மதுபோதையில் பிரதேசவாசிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியதை அடுத்து, மின்கம்பமொன்றில் கட்டப்பட்டார்.

இந்தச் சம்பவம் பாணந்துறைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

போதையில் தள்ளாடிக்கொண்டிருந்தவரைப் பிடித்து மின்கம்பமொன்றில் கட்டிய பிரதேசவாசிகள், அது தொடர்பில் களுத்துறை வடக்குப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர். அதனையடுத்து பொலிஸார், அவரைக் கைது செய்தனர்.

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட நபர் நாகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் அவர் மது அருந்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-4)

## களைநாசினி பதிவாளர் உடனடியாக பதவி நீக்கம்

கொழும்பு,நவ.24

விவசாய அமைச்சின் களைநாசினி பதிவாளர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

4 வருடங்களுக்கு முன்னர் தடை விதிக்கப்பட்ட கிளைபோசைட் உள்ளிட்ட 5 வகையான நாசினிகளுக்கான களை தடையை நீக்கி, அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டமையால், இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும் ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டிருந்த களைநாசினிகளுக்கான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (ஒ-4)

## பெண்களை அவமதிக்காதீர்

குட்டியாராச்சிக்கு எச்சரிக்கை

கொழும்பு,நவ.24

அதியுயர் சபையில் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சியை சபாநாயகர் கடுமையாக எச்சரித்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, நாடாளுமன்றில் இல்லாத மற்றொரு பெண் உள்ளிட்டோரை திஸ்ஸ குட்டியாராச்சி அதியுயர்சபையில் அவமதிக்கும் வகையில் பேசினார் என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் சபாநாயகர் அறிவிப்பை விடுக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

திஸ்ஸ குட்டியாராச்சியின் உரை தொடர்பில் நான் கவலையடைகின்றேன். அதியுயர் சபையில் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்படவேண்டாம் என்று கடுமையாக எச்சரிக்கின்றேன்.

இதுபோன்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதை உறுதி செய்ய ஆளும், எதிர்க்கட்சி பிரதம கொறடாக்கள் இது தொடர்பில் உறுப்பினர்களுக்கு அறியப்படுத்த வேண்டும்.

பெண்களை அவமதிக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து இடம்பெற்றால், நிலையியல் கட்டளைகளின் பிரகாரம் அந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பேன். -என்றார். (ஒ-4)

## குட்டியாராச்சியின் மீது தாக்குதல் நடத்த முயற்சி

கொழும்பு, நவ.24

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி மீது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்குதல் நடத்துவதற்கு முயற்சித்தனர். சபை அமர்வில் இதன்போது குட்டியாராச்சி பெண்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய விடயங்களை வைத்து உரையாற்றிக் கொண்டிருந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, குட்டியாராச்சியை தாக்குவதற்கு முயற்சித்தார்.

எனினும் அவரை சக உறுப்பினர்கள் தடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

## பெண் எம்.பிக்கள் சிலர் மீது வாய்மொழி துஷ்பிரயோகம்

கொழும்பு,நவ.24

நாடாளுமன்றில் பெண் உறுப்பினர்கள் சிலர், வாய்மொழி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று நாடாளுமன்றின் பெண் உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவர், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால், பெண் உறுப்பினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கருத்துத் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு, சபாநாயகருக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதற்கு முன்னரும் உயரிய சபையான நாடாளுமன்றில் பெண் உறுப்பினர்களுக்கு எதிராக வாய்மொழி துஷ்பிரயோகங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது ஜனநாயகத்தை மதிக்கும் சமூகத்தில் நல்ல முன்னுதாரணமாக அமையாது.

சட்டத்தை உருவாக்கும் இடமொன்றில் அதற்குப் பங்களிக்கும் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் பெண்கள், அந்த இடத்திலேயே வாய்மொழி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிறார்கள் எனின், இதன்மூலம் ஒட்டுமொத்த சமூகத்தின் சீரழிவும் புலப்படுகின்றது.

வேலைத்தளங்கள், பொதுப் பயணிகள் பஸ் சேவை, தெருக்கள் உள்ளிட்ட இடங்களில் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி, அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் உயரிய நிறுவனம் ஒன்றில் பெண் உறுப்பினர் ஒருவருக்கு எதிரான வாய்மொழி துஷ்பிரயோகம் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது.

பெண்களுக்கு எதிரான வன்முறையானது, ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினையாகவும், அடிப்படை மனித உரிமைப் பிரச்சினையாகவும் மாறியுள்ளது. எனவே தகாத வார்த்தைகளால் திட்டுவது, வாய்மொழி துஷ்பிரயோகம், அவமானப்படுத்தல், விமர்சித்தல் என்பன சர்வசாதாரணமாக இடம்பெறுவதுடன், சபைக்குள்ளும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றமை துரதிர்ஷ்டவசமானது.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவான மட்டத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில், நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 12 பெண் உறுப்பினர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் கருத்தாடல்கள் இடம்பெறுவதற்கான சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-4)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் தங்கள் அலுவலக விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**இடபம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் அவசியம்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்துக் காத்திருந்த சுபச்செய்தி ஒன்று கிடைக்கக் கூடும்.

**கடகம்:** தேவையான பணம் இருந்தாலும் திடீர் செலவுகள் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். பிற்பகலுக்கு மேல் மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**தனுசு:** தந்தையின் தேவையை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். பிள்ளைகளின் பணிகளில் அவர்களுக்கு உதவி செய்வீர்கள். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட அவப் பெயர் நீங்கும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2021 -2022



குரு பார்க்கக் கோடி நன்மை என்று கூறுவார்கள். நவக்கிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி** மகர ராசியில் இருந்து, கும்பராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குருபகவான் 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதைப் பார்ப்போம்.




பிரச்சினைகளுக்கு அஞ்சாமல் தன் குறிக்கோளை மட்டுமே பார்த்து திறம்படச் செயற்படும் மீன ராசி அன்பர்களே..!

உங்கள் ராசி நாதனான குருபகவான் இதுவரை 11 ஆம் வீட்டிலிருந்து சகல வசதி வாய்ப்புக்களையும் வழங்கிவந்தார். கடந்த 13.11.2021 முதல் விரய ஸ்தானமான கும்பத்துக்குள் அடியெடுத்துவைக்கிறார். 13.4.2022 வரை அங்கேயே இருந்து பலன்தரப்போகிறார். இந்த மாற்றம் உங்களுக்கு எப்படிப்பட்ட பலன்களைத் தரப்போகிறது என்று பார்ப்போம்.

விரைய ஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிப்பதால் தேவையற்ற செலவுகள் அதிகரிக்கும். எவ்வளவு முயன்றாலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முடியாமல் திண்டாடுவீர்கள். கௌரவத்துக்காகச் செலவு செய்வதை நிறுத்துங்கள். தேவையற்ற விடயங்களுக்காக வீட்டுக்குள் சண்டைபோடுவதைக் குறைப்பது நல்லது. குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள்.

உங்கள் வேலைகளை வேறு யாரையும் நம்பி ஒப்படைக்கவேண்டாம். நேரடியாக நீங்களே கவனித்துச் செயற்படுவது நல்லது. புண்ணியத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்வீர்கள்.

குருபகவான் உங்களின் நான்காம் வீடான மிதுனத்தைப் பார்ப்பதால் தாயாரின் ஆரோக்கியத்தில் இதுவரை இருந்துவந்த குறைபாடுகள் நீங்கும். தொல்லை கொடுத்த பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். பெரிய வீட்டுக்கு மாறுவீர்கள். சிலர் ஊர் விட்டு ஊர் செல்ல வேண்டியும் வரலாம்.

6ஆம் வீட்டை குருபகவான் பார்ப்பதால் கடனில் ஒருபாதியைச் செலுத்தி, நிம்மதி அடைவீர்கள். நோய் இருப்பதாக இருந்த அச்சம் விலகும். வெளிநாடு செல்லும் முயற்சிகள் சாதகமாகும். எதிர்ப்புகள் விலகும்.

குரு பகவான் 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஆரோக்கியம் சீராகும். வழக்குகள் உங்கள் பக்கம் அனுகூலமாக முடியும். பங்குச் சந்தை மூலம் எதிர்பார்த்த பணம் வரும்.

**13.11.2021 முதல் 30.12.2021 வரை**

அவிட்டம் நட்சத்திரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் இந்தக் காலகட்டத்தில் பணவரவுக்குக் குறைவு இருக்காது. முக்கியஸ்தர்களின் உதவியால் தடைப்பட்ட காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். வீடு வாங்க முயல்வீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. தந்தையின் உடல் நலத்தில் இருந்த பின்னடைவுகள் நீங்கும். அவருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சுபநிகழ்ச்சிகளால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வீட்டிலும் வெளியிலும் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**31.12.2021 முதல் 02.03.2022 வரை**

இந்தக் காலகட்டத்தில் சதயம் நட்சத்திரத்தில் குரு பகவான் பயணிப்பதால் குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப்போவது அவசியம். தேவையற்ற விவாதங்கள் சச்சரவுகள் ஏற்படலாம். செலவுகள் சமாளிக்க முடியாத அளவுக்கு மூச்சுமுட்டும். யாரையும் முழுமையாக நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். உறவினர் விடயத்தில் அத்துமீறித் தலையிட வேண்டாம்.

**02.03.2022 முதல் 13.04.2022 வரை**

குருபகவான் தன் சொந்த நட்சத்திரமான பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் கொடுத்துத்திரும்ப வராமல் இருந்த கடன்தொகை கிடைக்கும். சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். சில முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி, வேலை, திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். வங்கிக் கடன் கிடைக்கும். பேச்சில் ஒரு முதிர்ச்சி வெளிப்படும்.

**மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி ஓய்வில்லாமல் உங்களைக் கடினமாக உழைக்க வைத்தாலும், அதற்கேற்ற உயர்வில்லையே என சில நேரங்களில் ஏங்க வைக்கும்.**

# அலைபேசியுடன் ரஞ்சன் கைது



கொழும்பு, நவ.24

வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, அலைபேசியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்க, முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் எலும்பு மூட்டுப் பிரிவில் அனுமதிக்கப்படுவதற்காக, கடந்த 10ஆம் திகதியன்று, வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிகிச்சைக்காகத் தடுத்து வைக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க, நேற்று சிறைச்சாலை மருத்துவமனையில் கடமையாற்றும் சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது அலைபேசியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் 78ஆவது பிரிவின் கீழ் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட சிறைத் தீர்ப்பாயத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாம் முன்னிலையில் அவர் முன்னிலைப்படுத்தப்படுவார். சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

(ஒ-4)

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ.24

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி, நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை, நாவாந்துறை ஆரம்ப சுகாதார நிலையத்திலும் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை, குருநகர் கலாசார மண்டபத்திலும் காலை 9 மணி முதல் பி.ப. 3 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில், வட்டாரம் 01, 18, 19, 20, 21க்கான பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல் நாளை புதன்கிழமையும் வட்டாரம் 02, 03, 05க்கான பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

அத்துடன், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல், பொதுமக்களால் செலுத்தாதுள்ள சோலை வரி நிலுவைகள், நடப்பாண்டு சோலைவரி மற்றும் தண்ணீர் வரி போன்றவற்றைப்பெற்று, சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிட்டு மேம்படுத்தப் படவுள்ளன என்று யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

(ம-ரி)

# யதார்த்த தீர்வுகளே நாட்டுக்குத் தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ. 24**

**அறிவு, உண்மை, அறிவியல் மற்றும் தரவுகளின் அடிப்படையிலான யதார்த்தமான தீர்வுகளே நாட்டுக்குத் தேவை. பாரம்பரியம், நவீனம் என்பவற்றிலிருந்து விலகி, அரசியலுக்குப் பதிலாக நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டிய காலம் வந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

'சமகி விஹிதும்' படையணியை ஆரம்பித்து உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டை நேசிக்கும் இளம் தலைமுறையினர், எதைப் பற்றியும் சிந்திக்க முடியாமல், ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர். இந்த நாட்டில் வாழ்வதற்கு இளைஞர்கள் விரும்பவில்லை. அவர்கள் விரக்தியடைந்துள்ளனர். அதனால்தான் கடவுச்சீட்டைப்பெற நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

இளைஞர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை தொடர்பில் ஆணைக்குழு அறிக்கையில் பல பரிந்துரைகள் இருந்தபோதிலும், அதில் பல பரிந்துரைகள் இன்று மீறப்பட்டுள்ளன. நாட்டுக்கு நன்மதிப்பைக் கொண்டு வருவதே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை. அதற்காக, எந்தவொரு எதிர்க்கட்சியும் செய்யாத பல செயற்பாடுகளை நாம் முன்னெடுத்துள்ளோம்.

அரசு உரம் தொடர்பான தீர்மானத்தில் முன்வைத்த காலைப் பின்வைக்க வைத்துள்ளது என்றால், 300 போராட்டங்களை நடத்தினால் முழுமையாகப் பின்னடைவைச் சந்தித்துவிடும் - என்றார். (ம-4)

## கஜமுத்துக்களுடன் மூன்று பேர் கைது

10 கஜமுத்துக்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்முனை விசேட பொலிஸ் படையணியைச் சேர்ந்த பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்கள், 24, 50 மற்றும் 64 வயதுகளையுடைய மல்மாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர் (ம-4)

## களியாட்ட நிகழ்வு: இளைஞர்கள் கைது

பேஸ்புக் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட 12 இளைஞர்கள் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மாத்தறை பெலேனப் பிரதேசத்தில் உள்ள ஹொட்டல் ஒன்றில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்டிருந்த 6 பேரிடம் ஆயிரத்து 695 மில்லி கிராம் ஹெரோய்கன், இருவரிடமிருந்து ஆயிரத்து 250 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், கஞ்சா உள்ளிட்டவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-4)

## தங்கத்தின் விலை சரிவு



கொழும்பு, நவ. 24

உலகச் சந்தையில் தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளது.

அதற்மைவாக ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 846 ஐக்கிய அமெரிக்க டொலராகும். ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை, கடந்தவாரம் ஆயிரத்து 861.10 ஐக்கிய அமெரிக்க டொலராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## சிகரெட்டின் விலை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 24

சிகரெட் உற்பத்திவரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், சிலவகை சிகரெட்டுகளின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று மதுவரி ஆணையாளர் (சட்ட அமுலாக்கல்) கபில குமாரசிங்க தெரிவித்துள்ளரர்.

சிகரெட் விற்பனை செய்தாலும், இல்லாவிட்டாலும் உற்பத்தியாளர் வரிசெலுத்த வேண்டியிருப்பதால், வரியைவிட விலை அதிகமாக இருக்கும். அதனை உற்பத்தி நிறுவனம் தீர்மானிக்கும் வாய்ப்பு உள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சிகரெட் வரி அதிகரிக்கப்பட்டதன் பின்னர், சில சிகரெட்டுகளின் விலைகள் சுமார் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## தேர்தலில் வெற்றி பெறுவது சவாலான விடயமே அல்ல

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

அரசால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள், தேர்தலை இலக்காகக் கொண்டவையல்ல. தேர்தலை வெற்றி கொள்வது எமக்குச் சவாலான விடயமும் அல்ல என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இரண்டு வருடங்களின் பின்னர் நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றிபெறுவது தொடர்பில் எந்தவித சிக்கல்களும் இல்லை. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதே அரசின் எதிர்பார்ப்பு.

கொரோனாத் தொற்றுக் காரணமாக சுற்றுலாத்துறை முடங்கியதால், சுற்றுலாத்துறையினர் நாட்டுக்கு வருகை தரவில்லை. இதனால் 4.2 பில்லியன் டொலர் வருமானத்தை இலங்கை இழந்துள்ளது. வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்களின் வருமானமும் தொற்றால் இழக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நலன்புரி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இடையில் ஒப்பீட்டு ரீதியிலான பட்ஜெட்டை முன்வைத்துள்ளோம். பொதுநலவாய நாடுகளிடம் இலங்கை நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுள்ளது. இந்து சமுத்திர வலயம் தொடர்பான சர்வதேச சம்மேளனத்தில் உபதலைவர் பதவியும் இலங்கைக்குக் கிடைத்துள்ளது -என்றார். (ம-4)



## யொஹானிக்கு அபிமானி விருது

கொழும்பு, நவ.24

இலங்கையின் பிரபல இளம் பாடகி யொஹானி டி சில்வாவுக்கு, அகில இலங்கை கலாசார சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பின் 'கலா கீர்த்தி அபிமானி' விருது வழங்கப்பட்டுள்ளது.

கலைத்துறையினூடாக இலங்கைக்கு அவர் வழங்கிய பிரபலத்தை கௌரவிக்கும் வகையில், அவருக்கு இந்த கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது. (ம-4)

## மஹிந்த கிண்ணப் போட்டியில் சுகாதார வழிகாட்டல்கள் மீறல்

### எதிர்க்கட்சி விசனம்

கொழும்பு, நவ. 24

கொரோனாத் தொற்றுக்கால சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை மீறியே மஹிந்த ராஜபக்ச கிண்ண கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிகள் நடத்தப்பட்டன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேவிடம், வாய்மூல விடைக்கான மேலதிக வினாவை முன்வைத்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியும். ஆனால் பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை என்றே புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், மஹிந்த ராஜபக்ச கிண்ண கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டியைப் பார்வையிடுவதற்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், காலியில் நடைபெறும் இலங்கை - மேற்கிந்திய தீவுகளுக்கான டெஸ்ட் போட்டியைப் பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை.

ஒருவேளை இலங்கை - மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டிக்கும் மஹிந்த ராஜபக்ச கிண்ணம் என்று பெயர் வைத்திருந்தால், பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பார்களா? நாட்டில் ஏன் இரண்டு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன -என்றார். (ம)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யார் தருவார் அந்த உயிர்களை?

திருகோணமலை - கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற பேரிடர் ஒட்டுமொத்த இலங்கையையும் மீளமுடியாத பெரும் துக்கத்துக்குள் தள்ளியுள்ளது. நீண்டகாலத்தின்பின்னர், தமது கற்றல் நடவடிக்கைகளுக்காக 'பாதுகாப்பற்ற' கடற்பயணத்தை மேற்கொண்ட பள்ளிச் சிறுவர்கள், படகு கவிழ்ந்து - நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.


கிண்ணியா - குறிஞ்சாக்கேணிப்பகுதியில் மேற்கொள்ளப்படும் கடற்பயணம் பாதுகாப்பற்றது என்பது திடுதிடுப்பென நேற்றுத்தான் தெரியவந்த விடயமல்ல. இதை அதிகாரத் தரப்பினர் இதயசுத்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறித்த கடற்பயணம் பேராபத்தானது என்பதும், அந்தப் பகுதியில் பாலமொன்றின் தேவை தவிர்க்க முடியாதது என்பதும் காலாகாலமாக சமூக ஊடகங்களிலும் செய்தி ஊடகங்களிலும் வலியுறுத்தப்பட்ட கருத்துத்தான். இவ்வளவு ஏன், நாடாளுமன்றத்திலும்கூட இந்தத் தகவல் சென்று சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், மெத்தனப்போக்கு, தேர்தல்காலத்தில் மட்டுமே செய்யப்படும் அபிவிருத்தி என்னும் இரு சாபக்கேடுகள் அந்தப் பிஞ்சுகளின் குருதியை உறிஞ்சிக் குடித்துள்ளன.

இலங்கையில் அவசர - அவசிய - அபிவிருத்திகள் பேண்தகு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், பேரிடர்கள் ஏற்பட வேண்டும் என்பது எழுதப்படாத விதியா? அல்லது இந்த நாட்டுக்கே உரித்தான சாபக்கேடா? என்பது மில்லியன் டொலர் கேள்விகளாகப் பரந்து - விரிந்து வியாபிக்கின்றன. குறிஞ்சாக்கேணியில் நேற்று இடம்பெற்ற இந்தப் பெருந்துயர், மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கான ஆகப்பிந்திய எடுத்துக்காட்டு. மலையகத்தில் ஏற்பட்ட மண்சரிவுகள், ஆபத்தான இடங்களில் அமையப்பெற்றிருந்த கொலனிகள் என இதற்கான உதாரணங்கள் மிக அதிகம். மிகை அதிகமும்கூட. இதற்கு யார் பொறுப்பு? இந்தப் பிஞ்சுகளின் குடும்பங்களுக்கு என்ன பதிலை யார் வழங்கப்போகின்றனர்?

இந்த ஆபத்தான கடற்பயணத்தால் யாரேனும் அரசின் முக்கியமான பிரமுகர் ஒருவரேனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டிருந்தால் இந்த இடர் தவிர்க்கப்பட்டிருக்கும் அல்லது திடமான வாக்குவங்கியொன்று அங்கிருந்து, தேர்தல்காலம் நெருங்கியிருந்தால் இந்தப் பேரிடர் தவிர்க்கப்பட்டிருக்கவும் வாய்ப்பு இருக்கவே செய்கின்றது. ஆனால் என்ன செய்வது? இந்த இரண்டு வரப்பிரசாதங்களில் ஒன்றுகூட இந்தப் பிஞ்சுகளுக்குக் கிட்டவில்லையே.

கொரோனா என்னும் கொடிய அரக்கனின் பிடிக்குள் இருந்து தப்பித்து, தம் கற்றலுக்காகச் சிறகுவிரித்துப் பறந்த சிட்டுக்கள் மூச்சின்றிக் கிடப்பதென்பது எந்த இரும்பு இதயத்தையும் இளகவைக்கும் செய்திதான். இந்தப் பேரிடரே இறுதியாக அமையட்டும். ஆபத்தான கடற்பயணங்கள், அவசிய தேவையுடைய பாலங்கள் என்பன துரித கதியில் இனங்காணப்பட்டு அவை போர்க்கால அடிப்படையில் சீர்செய்யப்பட வேண்டும். அரசியல்வாதிகள் தம் வாகனங்களுக்காகவும், சுகபோகங்களுக்காகவும், வரவு - செலவுப் பேரம்பேசல்களுக்காகவும் காட்டும் அக்கறையில் பாதியையாவது இந்த மக்கள் 'மயப்பட்ட' அபிவிருத்திக்குக் காட்டட்டும். அதுதான், இந்தப் பிஞ்சுகளின் அவலச்சாவுக்குப் பரிகாரமாகவும் அமையும்.

'உண்மையில் கொரோனா கொடுமையானது இல்லை. கொரோனாவை விடக் கொடுமையாக பல விடயங்கள், பல 'அதிகாரக் கதிரைகள்' இங்குள்ளன'. இதைத்தான் நீர்க்குமிழிகளால் ஆட்கொள்ளப்பட்டு மூச்சிழந்துபோகும் நிலையில் அந்தப் பச்சிளம் பிஞ்சுகள் சிந்தித்திருக்கும். அதுதான் உண்மையும்கூட.




# உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

### விவசாய அமைச்சர் உறுதி

**கொழும்பு,நவ.24**

**எதிர்க்கட்சிகள் கூறுவதைப்போன்று, நாட்டில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நனோ நைட்ரஜன் உர இறக்குமதி தொடர்பில், விவசாய அமைச்சர் என்றவகையில் எனக்கும் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவுக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. நனோ நைட்ரஜன் தொடர்பில் சந்தேகங்கள் இருந்தால் கோப் குழுவுக்கு அழைத்து விசாரணை செய்யுங்கள். தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவலைக் கோருங்கள், இது தொடர்பான எந்தவொரு விவாதத்துக்கும் நான் தயார்.

மரக்கறிகளின் விலைகள் கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம். நாட்டில் கடந்த 3 மாதங்களாக தொடர்ந்து பெய்த மழையே இதற்குக் காரணம். மரக்கறி உற்பத்திக்குத் தேவையான விசேட உரத்தை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனைவிடுத்து நெல் உற்பத்திக்குத் தேவையான இரசாயன உரம் ஒருபோதும் இறக்குமதி செய்யப்படமாட்டாது - என்றார். (ஒ-4)

# மலர் முற்றம் காட்சித்திடல் வெள்ளி வரை திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்,நவ.24



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகை வாசம் என்ற பெயரில் மலர்ச்செடிகள் மற்றும் மரக்கன்றுகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் 'மலர் முற்றம்' என்ற காட்சித் திடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 8.30 மணிமுதல் இரவு 7 மணிவரை திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மலர் முற்றத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தாவர உற்பத்தியாளர்கள் காட்சிக்கூடங்களை அமைத்துள்ளனர். இந்த மலர் முற்றத்தில் தினமும் பல நூற்றுக்கணக்கானவர்கள் மலர்ச் செடிகளையும், மரக்கன்றுகளையும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக வுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வழமை போன்றே இந்த ஆண்டும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளை வழங்கி வருகின்றது. பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்த மலர் முற்றத்தில் காட்சிக்கூடங்களுடன் பார்வையாளர்களுக்கு ஆரோக்கிய இலைக்கஞ்சி வழங்கும் மையமும் திறக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

நவம்பர் 2021

## வடமாகாண மரநடுகை மாதம்



" நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

**-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)**







உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்



யாழ்.தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் இ.சபேசன்



அரசியல் ஆய்வாளரும் பத்தி எழுத்தாளருமான ம.நிலாந்தன்



மூத்த ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரன்



அரசியல் ஆய்வாளரும் பத்தி எழுத்தாளருமான அ.ஜோதிலிங்கம்



மூத்த ஊடகவியலாளர் நா.யோகேந்திரநாதன்



முன்னாள் ஊடகவியலாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான சு.ஸ்ரீகுமரன்



உதயன் முன்னாள் ஊடகப் பணியாளர் இராசையா ஸ்ரீதரன்



உதயன் ஆசிரியர் பீட பணியாளர் த .நாராயணன்



வலி.கிழக்கு பிரதேசசபை தவிசாளரும் முன்னாள் ஊடகவியலாளருமான தி.நிரோஷ்



உதயன் - சஞ்சீவி பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரும், பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதனின் இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்றன. அவரது உடல் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதை முதலாவது படத்திலும் இறுதிக்கிரியைகள் இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும், உதயன் பணிமனையில் அவரது உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இரங்கல் உரைகள் இடம்பெறுவதையும், மலரஞ்சலியையும் மிகுதிப் படங்களிலும் காணலாம்.



















# முள்நிறைந்த பாதையைச் செப்பனிட்ட ஊடகக்காரன்



## உதயன் – சஞ்சீவி பிரதம ஆசிரியர் அமரர் ம.வ. கானமயில்நாதனுக்கு அஞ்சலி

■ என்.பத்மசீலன்
*(சுடர்ஒளி, உதயன். முன்னாள் பிரதம ஆசிரியர்)*

விடுதலை வேட்கையுடன் 1985இல் யாழ்.மண்ணில் உதித்தான் உதயன். இந்தப்பத்திரிகையின் ஸ்தாபக ஆசியராக அரும் பெரும்பணியாற்றியவர் ம.வ.கானமயில்நாதன் . அவருடைய மறைவு தமிழ்ப் பத்திரிகை உலகுக்கு மட்டும் அல்ல. அனைவருக்கும் பேரிழப்பாகும்.

அறிவாற்றல் ,அணுகுமுறை, துணிச்சல், பல மட்டத்தினருடனும் கொண்டிருந்த நட்புரிமை ,செய்தியாளர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் பெருந்தன்மை, உடனடியாகத் தீர்வு காணத் துணிச்சலாக எடுக்கும் தீர்மானங்கள் ,தன்நம்பிக்கை, தற்றுணிவு என்பன அவரிடம் காணப்பட்ட சிறப்பம்சங்களாகும். 1967 ஆம் ஆண்டு முதல் கானமயில்நாதனுடன் நெருங்கிப்பழகியவன் நான். சாதாரண செய்தியாளராக நான் தினபதி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் இணைந்தபோது கானமயில்நாதன் , சிரேஷ்ட உதவியாசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். 1985 இல் யாழ்ப்பாணத்தில் தொழிலதிபர் ஈ.சரவணபவனால் உதயன் பத்திரிகை ஆரம்பிக்கும் வரை தினபதி - சிந்தாமணிப் பத்திரிகைகளின் பிரதம உதவி ஆசிரியராகவும் பின்பு செய்தி ஆசிரியராகவும் பணியாற்றி, அந்தப்பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றவர். அப்பொழுது அந்தப் பத்திரிகைகளுக்கு பிரதி ஆசிரியராக இருந்தவர் சுடர் ஒளி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியராக இருந்த கே. கே.இரத்தினசிங்கம்.

அந்தக்காலத்தில் ஆங்கில, சிங்களப் பத்திரிகையாளர்களுடன் செய்திகள் தொடர்பாக அடிக்கடி முரண்பாடு ஏற்படும். கானமயில்நாதன் எல்லோரையும் சமாளித்துவிடுவார். அவருடைய கள்ளம் கபடமற்ற நேர்மையான செயற்பாடுகள் அனைவரையும் கவர்ந்திருந்தன. சகலருடனும் நட்புடனே பழகி வந்தார். ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு செய்தியாளர்கள் தான் முதுகெலும்பு என்பதை அவர் சரியாகக் கணித்திருந்தார். வெளியூர்ச் செய்தியாளர்கள் வரும்போது அவர்களுக்கு மதிப்பளித்து ஆசனம் வழங்கும் பண்பு அவரிடம் இருந்தது.

1985முதல் கானமயில்நாதன் , கடந்து வந்த பாதை மலர்கள் தூவப்பட்டதாக இருக்கவில்லை. முள்ளும் புதர்களும் இடர்களும் நிறைந்தவையாகவே இருந்தன. வலிசுமந்த உதயனின் பயணத்தின்போது ஏற்பட்ட தடங்கல்களையும் சவால்களையும் தகர்த்தெறிந்து விட்டு உதயனை முன்னோக்கிக் கொண்டு சென்றவர் கானமயில் நாதன். அந்தக்காலத்தில் அச்சுறுத்தியும், குண்டெறிந்தும் ஊழியர்களைக் கொலை செய்தும், உதயனின் பயணத்தைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்விகண்டன.

கானமயில்நாதன் ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையிலும் தினபதி - சிந்தாமணி பத்திரிகைகளிலும் பின்பு உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளிலும் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

■ எஸ்.ராஜ்குமார்


# புதிய நடைமுறைச் சொற்களைத் தமிழுக்குத் தந்தவர் கானமயில்நாதன்!

எமது ஆசிரியர் கானமயில்நாதன் காலமாகிவிட்டார் என்ற செய்தியை நேற்று முன்தினம் காலையில் உதயன் நிர்வாக இயக்குநர் என்னிடம் கூறிய போது, ஆசிரியருடனான எனது ஊடாட்டல்கள் வந்து ஊசலாடிச் சென்றன.

அது ஒரு காலம் அழகிய காலம். அவருக்கு கீழே வேலை செய்த அந்த நினைவுகள், அன்பான ஏச்சுக்கள், பேச்சுக்கள், அந்தக் கிறுகிறுத்த குரலில் திட்டல்கள் எல்லாம் வந்து போயின. உதயன் ஆரம்பமாகி பிறந்து ,தவழ்ந்து, தட்டுத் தடுமாறி, நடக்க ஆரம்பித்து பின்னர் நிமிர்ந்து நடக்கத் தொடங்கி வீறு கொண்டு எழுந்தபோது அங்கே நானும் ஒரு ஆசிரியபீடத்து ஊழியனாக இருந்தேன் என்பது எனக்குக் கிடைத்த வாழ்நாள் வரம். அதிலும் ஆசிரியர் கானமயில்நாதனின் கீழ் வேலை செய்தது என்பது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்.

அந்த போர்க் காலத்தில் கடுமையான நெருக்குவாரங்களுக்கு மத்தியில் தனது எழுத்தின்மூலம் வாசகர்களைக் கட்டிப்போட்டு வைத்திருந்தவர் ஆசிரியர். தினமும் அவர் எழுதும் ஆசிரிய தலையங்கம் ஒவ்வொன்றும் அப்போது சீறிப் பாய்ந்த துப்பாக்கித் தோட்டாக்களையும், வெடித்துச் சிதறிய விமானக் குண்டுகளையும் விட பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன.

காலையிலே வேலைக்கு வந்தது முதல், என்ன வேலையாக அவரது அறைக்குச்சென்றாலும் "நான் எடிடோரியல் எழுத வேணும் ஐசே. என்னைக் குழப்பாதையும்" என்று சொல்லிக் கொண்டேயிருப்பார். என்ன ஒரு இத்துனூண்டு எடிட்டோரியலுக்கு இவ்வளவு அலட்டிக்கொள்கிறாரே என்று சலித்துக் கொள்வோம். ஆனால் அடுத்தநாள் அவர் எழுதிய எடிட்டோரியலை வாசித்துப் பார்க்கும் போதுதான் விளங்கும், இதுக்குத்தான் இவ்வளவு கெடுபிடிகள் என்று. அந்தளவுக்கு ஆணியாக, அணுகுண்டாக தனது கருத்தை முன்வைத்திருப்பார். ஆனால் அது அவரது கருத்து, பத்திரிகையின் கருத்து என்பவற்றைவிட ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் கருத்தாகவே அமையும்.



இது தவிர அவரது சொற் பாவனைகள் பல பின்னாளில் ஜனரஞ்சகமாகி தமிழுக்கே ஒரு நடைமுறைச் சொல்லாக மாறிய பெருமைகளும் உண்டு. உதாரணமாக 90 களில் மோசமான பீப்பாய்க் குண்டுகளை வீசி தமிழ் மக்கள் பலரின் சாவுக்குக் காரணமாக இந்த வை- 12 குண்டுவீச்சு விமானத்துக்கு "சீனச்ச கடை" என்ற பெயரைச் சூட்டிய பெருமை ஆசிரியர் கானமயில்நாதனையே சாரும். அந்த சொற்பதம் பின்னர் தமிழிலே வை -12 குண்டுவீச்சு விமானம், அல்லது பீப்பாய்க் குண்டு வீசும் விமானம் என்ற சொற்பதங்கள் விலகி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஏன் இந்திய சஞ்சிகைகளில் கூட "சீனச் சகடை" என்ற பெயரில் குறிப்பிடும் வழக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறாக ஆசிரியரின் ஆசிரியத் தலையங்கங்களும் சரி, செய்திப் பரிமாற்றங்களும் சரி , மக்கள் மத்தியில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தண்ணி தெளிக்கப்பட்டு, தறிகெட்டு, தறுதலைகளாகத் திரிந்த என் போன்ற சிலரைத் தட்டி நெளிவெடுத்து, ரிங்கர் பண்ணி ஊடகவியலாளர்களாக்கிய பெருமை ஆசிரியரையே சாரும். உதயனின் ஆசிரிய பீடத்தில் சேர்ந்தபோது 'இவனையெல்லாம் வைச்சு குப்பை கொட்ட வேண்டியிருக்கே' என்று தலையிலடித்துக் கொண்ட உதவி ஆசிரியர்களுக்கு மத்தியில் 'இல்லை இவனிடம் ஏதோ இருக்கிறது 'என்று எக்ஸ்ரே இல்லாமல் கண்டுபிடித்து எம்மைப் பட்டைதீட்டி பளிங்குகளாக்கிய பெருமை ஆசிரியருக்கு உண்டு.

ஆரம்பகாலத்தில் நாம் செய்திகளை எழுதிக் கொடுக்கும்போது அதனைத் திருத்துவதும் அல்லது வெட்டி மறுபடி எழுதுவதும் தான் உதவி ஆசிரியர்களின் பணியாக இருக்கும். ஆனால் ஆசிரியரோ எழுதிய செய்தியைக் கொண்டுவா என்று கூறி வாங்கிப் பார்த்து இதனை இப்படி எழுதக் கூடாது. அப்படி எழுத வேண்டும்'என்று தனிக் கவனமெடுத்து திருத்துவார்.

ஊடகத் தமிழை எமக்குத் திணித்து தீத்தி விட்டார். இவ்வாறாக அடுப்பு ஊதிக் கொண்டிருந்த பல குழல்களை புல்லாங்குழல் ஆக்கிய பெருமையும் ஆசிரியரைச் சேரும். பின்னர் உதயனிலும், சுடர்ஒளியிலும் எழுதித் தள்ளி, பெருமைகளைச் சேர்த்த போதெல்லாம் அவைகளை கேள்விப்பட்டும், கேட்டுத் தெரிந்து கொண்டும் அவ்வப்போது கூப்பிட்டு கிடைக்கும் பாராட்டுக்களை பெரும் விருதுகளாக கருதி பெருமைப் பட்டுக்கொள்வோம்.

இப்போது ஊடகத்துறையைவிட்டு விலகி, வேறு துறைகளில் கால்பதித்த போதிலும் அந்தத் துறைகளிலும் ஆசிரியரின் அந்த வழிகாட்டல்கள் அடிக்கடி வந்து என்னை நெறிப்படுத்துகின்றன. பாடிய வாயும் ஆடின கால்களும் சும்மா இருக்காது என்பார்கள். அப்படி நான் மீண்டும் பேனாவைத் தூக்கும் நிலை வந்தால் அப்போதும் ஐயா! ,உங்கள் வழிப்படுத்தல்கள் எனது எழுத்து வரிகளில் எதிரொலிக்கும்.

நன்றி! சென்று வாருங்கள் சேர்!!

# நிலைமை படுமோசம் வீடுகளில் பயிரிடுங்கள்!

*தயாசிறி ஜயசேகர 'அட்வைஸ்'*



**கொழும்பு, நவ. 24**

**இலங்கை பயங்கரமான நிலைமைக்கு வந்துள்ளது. எனவே, அனைவருமே சாப்பிடத் தேவையான ஏதாவது ஒரு பயிரை உங்கள் வீடுகளில் பயிரிட்டுக்கொள்வது நல்லது; என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேலும் தெரிவிக்கையில்,

துறைமுகத்தில் சிக்கியுள்ள இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் கொள்கலன்களைக்கூட விடுவிக்க முடியாமல் நாடு அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. வாகன இறக்குமதி பற்றி பேசுவதற்கான நேரம் இதுவல்ல. மாறாக, எரிபொருள் பயன்பாட்டை குறைக்க வீதிகளில் ஓடும் வாகனங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும். வாகனங்களை தனிப்பட்ட முறையில் பயன்படுத்துவதை தடுக்கவேண்டும். வாகனங்களில் கட்டாயம் மூவர் அல்லது நான்கு பேர் பயணிக்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டுவர வேண்டும்.

ஆண்டுக்கு 7 பில்லியன் அமெரிக்க டொலரை எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடுகிறோம். ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருளை கொள்வனவுசெய்ய செலவாகும் 500 மில்லியன் டொலரை பெற்றுக்கொள்ள உலக நாடுகளிடம் இலங்கை கடனாளியாக மாறியுள்ளது. இலங்கையின் எதிர்காலம் இதனைவிட மிகமோசமான நிலைமைக்கு செல்லலாம். இதனால், அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் வாகனங்களை பயன்படுத்தி, அனைவரும் சிக்கனமாக எரிபொருளை பயன்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். எனினும், இந்த நெருக்கடிக்கு எந்த அரசாங்கமும் உடனடியாக தீர்வுகாண முடியாது. இந்தநிலை நீடித்தால் பால் பவுடரைகூட இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்படும். ஆகவே உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மக்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் முழுந்தவரை பயிரிடுவதுடன், எதிர்நோக்கவுள்ள நெருக்கடிக்கும் நாம் தயாராக வேண்டும் - என்றார்.

(த-இ)

---

## டிப்பர் மோதி கால் முறிந்தது

யாழ்ப்பாணம், நவ. 24

கோப்பாயில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில், ஒருவர் கால்முறிந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த முதியவரை டிப்பர் வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

---


## துனுக்காய் பிரதேச சபையின் 2022ம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கமைய துணுக்காய் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டு 2021.11.24 ஆம் திகதியிலிருந்து 2021.12.07 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பிரதேச சபையிலும் சபையின் நூல்நிலையங்கள் மற்றும் சனசமூக நிலையங்களிலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப் பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்**
**அ.அமிர்தலிங்கம்**
**பிரதேசசபை, துணுக்காய்.** (cr.36454) (2.6)


---

## மாவீரர்தின...

கள் போராட்டங்களை நடத்தியதும் கிடையாது. எனவே, இலங்கை அமைதிப்பூங்காவாக மாறவேண்டுமெனில் மாவீரர் நினைவேந்தலுக்கு எவ்வித இடையூறும் இல்லை என்பதை பகிரங்கமாக அறிவியுங்கள்."

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஆளுங்கட்சியினிடம் கோரிக்கை விடுத்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 3 ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டில் தமிழர்கள் வாழ்ந்த வாழுகின்ற பகுதிகளில் போர்க்காலத்தில் தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை தமிழ் மக்கள் நினைவேந்தி வருகின்றனர். இந்தநிலையில், மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்னால் தற்போது பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக கார்த்திகை மாதத்தில் படையினரைக் குவித்து துயிலும் இல்லங்களை மறைப்பதன்மூலம், தமிழ் மக்கள் தமது வீரப்புதல்வர்களை மறக்கக்கூடிய சூழல் வரும் என்றா கருதுகிறீர்கள்?

2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் மிகவும் அமைதியான முறையில் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவிக்கு வந்த பின்னர் 2019 இலும் நிகழ்வு இடம்பெற்றது. மக்கள் எவ்வித அசம்பாவிதங்களிலும் ஈடுபடவில்லை.

தெற்கில் விழாக்கள் நடத்தப்படுகின்றன, விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன, இவற்றுக்கெல்லாம் கொரோனா கட்டுப்பாடுகள் இல்லை. மாறாக கொரோனாவை காரணம்காட்டி துயிலும் இல்லங்களுக்கு முன்னால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வடக்கு - கிழக்கு பகுதிகள் போர்க்களம் போல் காட்சியளிக்கின்றன. உங்களுக்கு புரிதல், புரிந்துணர்வு, இணக்கம், இணக்க அரசியல் வேண்டும் என்றால் முதலில் மக்கள் மனங்களை வெல்லுங்கள். வணக்கமுறைகளைத் தடுப்பதன்மூலம் எதைச் சாதிக்கப்போகின்றீர்கள்? மாவீரர் தின நிகழ்வை சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை. அதற்கு எதிராக ஒரு பேரணியைக்கூட நடத்தியதில்லை. ஆனால் அரசியல் தேவைக்காக ஜனாதிபதியில் இருந்து அமைச்சர்மார்வரை இந்த விடயத்தை வைத்து அரசியல் நடத்துகின்றனர்.

உங்களது குழந்தை, சிங்கள வீரன் புதைக்கப்பட்ட இடத்தில் சப்பாத்துக் காலுடன் நடந்தால், அதில் பந்து விளையாடினால் உங்கள் மனம் எப்படி இருக்கும்? எனவே, நினைவேந்தல் நடத்தும் உரிமையை வழங்குங்கள். அப்போதுதான் அமைதி பிறக்கும். நாட்டின் பொருளாதாரம் மேம்படும். இலங்கை அமைதிப் பூங்காவாக மாற வேண்டுமெனில், மாவீரர்களை நினைவுகூருவதற்கு எவ்வித இடையூறும் இல்லை என்பதை பகிரங்கமாக அறிவிக்கவும்." - என்றார்.

(த-44)

---


## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 10 . 1927

மறைவு 23 . 11 . 1990



கூட்டுறவாளர்

**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள்

(ஸ்தாபகர் முன்னாள் தலைவர்)

யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து **இன்று 31 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.**

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

(cr36452) (2.6)


---


## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் திருமதி**

**புவனேஸ்வரி இராஜையா**

**(உடையார்)**

**(24. 11.1996)**

வருடங்கள் 25 சென்றாலும்
எம்மை ஊக்குவித்து,
சீராக்கி வழிகாட்டிய உங்கள்
நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டகலா

**மகன், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.**
**கல்வளை, சண்டிலிப்பாய்.**

acc17644) (2.6)


---


## மரண அறிவித்தல்



**தம்பித்துரை சஞ்சீவ்ராஜ்**

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை சஞ்சீவ்ராஜ் நேற்று (23.11.2021) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்) மற்றும் பராசக்தி தம்பதியரின் புதல்வனும், கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்) தம்பதியரின் மருமகனும், தர்சினி அவர்களின் பாசமிகு கணவரும், ராதவி, சாதனா, கவின்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், புவிராஜ் (கனடா), பிருதிவிராஜ் (லண்டன்), சண்முகராஜ் (கனடா), பகீரதராஜ் (ஆசிரியர் யா/சென் சாள்ஸ் வித்தியாலயம்), சுகுணராஜ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**(திரு.த.பகீரதராஜ் சகோதரன்)**
**0773975179**

(CS6691-6)

# 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்

மண்ணில் 04 . 06 . 1943



விண்ணில் 26 . 10 . 2021

கடந்த (26.10.2021) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தின் ஆணிவேர் எமது அன்புத் தாயார்

## அமரர் இரத்தினவேலாயுதம் தனலட்சுமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.11.2021) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலையிலும் அதனைத்தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

3 ஆம் சந்தி,
தொண்டைமானாறு.

(ne .17815) (2.6)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




## அதிபர் திருமதி இளவேந்தி நிர்மலராஜ்

(SLPS - I, B. BA, PGDE, M.Ed, PGDEM, Dip.in Singala)

Congratulations

கல்விக் கலைதனில் காலடி பதித்து
எண்ணிலாப் பல கற்கைகள் கற்று
உற்றபொழுதினில் ஊர் போற்றும் பணி செய்து
உலகமெலாம் தன் புகழ் நிலைக்க
உயர் பதவியாம் அதிபர் பணிதனில்
உன்னதமாய் தரம் ஒன்றில் கால்பதிக்கும்
உத்தமியாம் எம் முதல்வரவர்களை
கல்விக் கடலில் கரை கண்டு
காவியத் தலைவியாய் வாழ உள்ளன்போடு வாழ்த்துகின்றோம்.

(cs.1113) (2.6)

வாழ்த்துவோர்: **கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை**

ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்

# பெயர் மாற்றம்

மல்வம், உடுவில் சுன்னாகத்தில் வசிக்கும் **மன்றோ பபிறோசலீன்** ஆகிய நான் எனது பெயரை **மன்றோ பபிறோஸ்ரலின்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மன்றோ பபிறோஸ்ரலின்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cs41256) (2.6)

**மன்றோ பபிறோஸ்ரலின்**

# வாடகைக்கு

நல்லூரில் அமைந்துள்ள வீடு ஒன்றில் அறை வாடகைக்குண்டு.(பெண்கள் விரும்பத்தக்கது)

(cs41263) (2.6)

**076 688 5871**

கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கானதும், கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவைக்கானதுமான

# கேள்வி கோரல் 2021

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல. | பெறுகை இல. | கேள்விகள் | உத்தரவாத வைப்பு பணம் (மீளளிப்பு செய்யக்கூடியது) செல்லுபடியாகும் காலம் 15.12.2021 - 15.01.2022 | மீளளிப்பு செய்யப்படாத கட்டணம். |
|---|---|---|---|---|
| 01 | NP/DGH KOC/2021/G/70 | தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் | N/A | 500.00 |
| 02 | NP/DGH KOC/2021/G/75 | கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவை | 50,000.00 | 1000.00 |

01. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 24.11.2021 தொடக்கம் 15.12.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விகள் 15.12.2021 ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொதுவைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு சேவைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

03. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329/0212284111) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

04. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.**

(cr.36451) (2.6)

# நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தனியார் துறையினர் வெளிநாட்டு மண மக்கள் ஏராளமாக உள்ளனர்.
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.**
(யா/ கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(CS 18020) 1-6

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 . 11 . 1939



மறைவு 25 . 10 . 2021

## அமரர் மாணிக்கவாசகர் மகாலட்சுமி

(ஓய்வுபெற்ற லிகிதர் -
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

கடந்த 25.10.2021 அன்று இறைபதம் அடைந்த மகாலட்சுமி மாணிக்கவாசகர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 21.11.2021 அன்று கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (24.11.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

108/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4427

(cs.41259) (2.6)

குடும்பத்தினர்
மருமகன் - விஷ்ணு
077 729 3676

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 04 . 1942

இறப்பு 22 . 11 . 2021

## கிருஷ்ணபிள்ளை தம்பையா

அல்வாய் மேற்கு திக்கத்தை பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை தம்பையா (ஓய்வுநிலை உப தபாலதிபர்) நேற்று முன்தினம் (22.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், ஆறுமுகம் ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், தவரூபன் ( கனடா ), கோமதி, (கனடா) காமினி ( ஆசிரியர் யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), மதுரா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாரூபி ( கனடா) ஸ்ரீகெங்காதரன் (கனடா), குமரன் (ஆசிரியர் யா / புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), அஜிதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தவலட்சுமி, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவபாதம், சண்முகம், சர்வானந்தம், புனிதவதி மற்றும் தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரணிதன், வைஷ்னவி, சாங்கவி, ரம்மியா, துஜிதன், கஜானா, சரணிசன், திருத்தகி, வித்தகன், அக்சயா, அக்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2021) வியாழக்கிழமை, காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cr.36455) (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 28 . 04 . 1943

இறப்பு 23 . 11 . 2021

## கந்தையா பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பஞ்சலிங்கம் அவர்கள் நேற்று (23.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தியர் சுப்பிரமணியம் அன்னப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (சுகந் சர்வதேச நிறுவனம் - யாழ்ப்பாணம்), தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மாவட்ட நில அளவை அலுவலகம்-யாழ்ப்பாணம்), கெங்காதரன் (விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை-மட்டக்களப்பு), ஸ்ரீ சிவராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திஹாஸ்னி, தஷ்வின், மாதுரி, நிதுர்னன், சிபிஷன், றகிஷன், இனியா ஆகியோரின் அன்புப் பேரனும், குலவீரசிங்கம், அமரர்களான திலகவதி, சிந்தாமணி, நல்லம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர்களான நாகராசா, தியாகராசா, ராஜேஸ்வரி, சண்முகானந்தன் மற்றும் கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரட்ணாவதி, இரட்ணசோதி, இரட்ணாகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2021) முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**021 205 3124, 077 1310 899**
**30/2, சம்பியன் வீதி, கொக்குவில்.**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 664) 1-6

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 03 . 1935

மறைவு 23 . 11 . 2021

## அசீர்வாதம் யோசேப்பு மரியதாசன்

யாழ். நாரந்தனையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 3ம் குறுக்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் யோசேப்பு மரியதாசன் அவர்கள் நேற்று (23.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சவரிமுத்து ஆசீர்வாதம், திரேசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற செயமணி (இராசாத்தி) அவர்களின் கணவரும், சுபாசினி, சுபோதினி, சுபேந்திரன், சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுமார், செருபின் செயராசா, மொனிக்கா, நவக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும்,சுதேசன், சுதேசி, அன்ரனி, அனிற்றா, குயிலீனா, யோசுவா, அச்வின், கல்வின், அரவின் ஆகியோரின் அன்புப் பேரனும், சுசித்திரா, சுசித்திரன் ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான கிரேச்மேரி தம்பிரத்தினம், விக்ரர் இம்மானுவேல், தேவசகாயம் (குணம்) மற்றும் யூசினியா (கிளி), குயின், தேவரட்ணம், பிள்ளை, செயரட்ணம்(தம்பி), அன்புமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான தம்பிரட்ணம் மற்றும் தயா, றெமி, ஞானப்பிரகாசம், செயசிங்கி, பரராசசிங்கம், கிருசாந்தா, சுகுணா, ஆனந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (24.11.2021) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| சுபாசினி சுகுமார் | +61 414790823 |
| சுபோதினி நவரட்ணம் | +44 7773335838 |
| சுபேந்திரன் மரியதாசன் | +447908063787 |
| சுதர்சினி வடிவேலு | +1 4164568713 |
| இரஜனி தர்மசேகரம் (பெறாமகள்) | +94212225006 |
| தர்சாபொன்னுத்துரை (பெறாமகள்) | +94 766611149 |

(CS 666) 1-6

# மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 05 . 1950

மறைவு 23 . 11 . 2021

## லீனப்பு டேவிட்

காங்கேசன்துறை ஊறணியைப் பிறப்பிடமாகவும் சற்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட லீனப்பு டேவிட் நேற்று (23.11.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லீனப்பு-லூர்த்தம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பிலிப்பு-மரியமுத்து ஆகியோரின் பாசமிகு மருமகனும், மற்றில்டாவின் (தங்கா) அன்புக் கணவரும், மேரி நிஷாந்தினியின் பாசமிகு தந்தையும், பவிதரனின் அன்பு மாமனாரும், றிபிக்ஷன், லோஜித் மற்றும் கிரிந்தியாவின் பாசமிகு பேரனும், மேரிஸ்ரலா, காலஞ்சென்ற பெனடிற், விமலராணி மற்றும் ஸ்ரீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற திருச்செல்வம், மேரிகிறிஸ்ரி மற்றும் சுதாவின் அன்பு மைத்துனரும், வர்ணசீலன், காலஞ்சென்ற வனிதவதி, அருட்தந்தை வசந்தசீலன் ஆகியோரின் மாமனாரும், மிறோல்ட், மயூலிக்ஸ், ஸ்ரீபனி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2021) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சற்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னாரின் பூதவுடலானது சற்கோட்டை பழைய வேதக் கோவிலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு - 021 226 4605

(CS 665) 1-6

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24 . 07 . 1942

ஆண்டவன் அடியில்
18 . 11 . 2016



அமரர்

## கதிர்காமு கந்தையா தியாகராசா

**Adm. Secretary Cum Chif Clerk Of Chavakacheri. MPCS.Ltd**

**திதி: 24.11.2021**

கார்த்திகை என்றவுடன் கண்கள் பனிக்கின்றன
பார்த்த இடமெல்லாம் பாங்காய்த் தெரிகின்றீர்கள்
பார்த்திருந்த காட்சியும் பிரிந்து சென்ற வேதனையும்
ஈர்த்து ஈர்த்து எம்மை இயன்றளவும் வருத்துகின்றது.

வேரினைப் பிடுங்கினாலும் நாங்கள் வீழ்ந்து விடாமல்
பாரினில் வாழ்வதற்குப் பாதைகள் அமைத்துத் தந்தீர்கள்
பேரிடர் வந்தாலும் நீங்கள் ஆற்றிய பணிகளைச்
சீரிய முறையில் சிறப்பாகச் செய்து முடிப்போம்

ஆண்டு ஐந்தானது அப்பா உங்கள் அன்பும் பாசமும்
மீண்டும் மீண்டும் நீங்காமல் எங்கள் விழியோரம் நனைகின்றது
ஆண்டு ஐந்தில் சிரார்த்தம் செய்து உங்கள்
ஆன்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கின்றோம்.

அன்பு மனைவி
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள்.

சங்கத்தானை
சாவகச்சேரி. (cs. 41257 (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 05 . 1938

மறைவு
21 . 11 . 2021



## சரவணமுத்து அருளானந்தம்

**(ஓய்வுபெற்ற புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க முகாமையாளர்)**

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார் கட்டு வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அருளானந்தம் அவர்கள் கடந்த (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சரவணமுத்து, சின்னாச்சி தம்பதிகளின் அன்பு புதல்வரும், காலஞ்சென்ற நாகலிங்கம், சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும்,இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும்,சாந்தினி, சாந்தகுமார், சந்திரகுமார், ராஜினி, சசி குமார், சிவகுமார், சிவாஜினி, சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனக ரத்தினம், சிவகௌரி, சரஸ்வதி, குணபாலா, சிவாஜினி, சிராணி, சுபாகரன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும்,நிவேதா, துஷானி, ஜதுஷன், அபிநயா, மிதுஷன், தனுஷன், டினோஜன், நர்மிகா, விதுஷன், ரிஷாந்தன், தர்மிகா, சிரோன், சரன், சாருனி, சுருதி, சுவஸ்தி, சிமித்தி ஆகியோரின் அன்புப் பேரனும்,நிறா, தேவ் ஆகி யோரின் அன்புப் பூட்டனும்,காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், நாகம்மா, அன்னம்மா, பாக்கியம், தெய்வானைப்பிள்ளை மற்றும் தேவராசா ஆகியோரின் அன் புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிங்கராசா, செல்வராசா மற்றும் தர்மராசா, சண்முகராசா, பூமணி, சிரோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.11.2021) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லமான உடையார்கட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுதந்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
சசிகுமார் - மகன்
Mobile : +94771185241

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 664) 1-6

தான் பிரசவித்த...

னர். குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம், மட்டுவில் வடக்கில் நேற்றுஅதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

18 வயதுடைய பெண், திருமணத்துக்கு முன்னரே கர்ப்பமாகியதால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க அந்தக் குழந்தை பிரசவமானதும் குழந்தையைப் புதைக்க முற்பட்டுள்ளனர் என்று ஆரம்ப விசாரணையைக்கொண்டு பொலிஸார் கூறினர்.


நேற்றுஅதிகாலை குழந்தை பிறந்ததும், அந்தக் குழந்தையைப்புதைக்கும் கைங்கரியம் மும்முரமாக இடம்பெறுவதை அவதானித்த அயலவர்கள், சம்பவம் தொடர்பில், சாவக்ச்சேரி சுகாதார மருத்துவஅதிகாரி மற்றும் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குழந்தையை உயிருடன் மீட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசென்றனர். பின்னர் தாயும் சேயும் மேலதிக சிகிச்சைக்காக விசாரணைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(கு-27,159,131)

# மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 07 . 1946

இறப்பு
23 . 11 . 2021



## அமரர் திரு. முத்தையா தர்மலிங்கம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்தையா தர்மலிங்கம் அவர்கள் நேற்று (23.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா சுந்தரம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான முத்துராஜா, தங்கேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, பாலசிங்கம், ராஜசிங்கம் மற்றும் மாணிக்கம், காலஞ்சென்ற தெய்வேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், லவன் (பிரான்ஸ்), பிரபாலினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுகந்தன் மற்றும் ஜயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லதா (பிரான்ஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்), லவானி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், ஆதீஸ், அபிசா, லதீஸ், சால்ஸ், நிலா, ஜீவித், காலஞ்சென்ற தஸ்மிதா மற்றும் அஸ்மிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2021) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் வீட்டில் இடம்பெற்று பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நவாலி,
அரசடி மானிப்பாய். (cs 41260) (3.6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
10 . 08 . 1937

இறப்பு
23 . 11 . 2021



## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கணேசபிள்ளை

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணேசபிள்ளை நேற்று (23.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற கனகலட்சுமியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன், காலஞ்சென்ற மகாலிங்கம், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயகௌரி (லண்டன்), காலஞ்சென்ற பிரியதர்சினி, நளாயினி (ஆசிரியர்-கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் (பொறியியலாளர்- லண்டன்), புஸ்பராஜா (மருத்துவர்-கிளிநொச்சி), ஆனந்த செந்தூரன் (திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கபிலன், சங்கவி, காயத்திரி, துர்க்கா, சாய்பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2021) வியாழக்கிழமை பழங்கிணற்றுப் பிள்ளையார் கோவிலடி கலாசாலை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 404 6648

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 670) 1-6

### படகுப்பாதை...

நேற்றுக்காலை வழமைபோன்று மாணவர்கள் உட்பட பொதுமக்கள் சென்றுகொண்டிருந்தபோதே இந்தச் அனர்த்தம் இடம்பெற்றது. இது அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
குறித்த படகுப்பாதையில், பாடசாலை மாணவர்கள் 17 பேர் உட்பட பலர் பயணித்துள்ளனர். பாதை புரண்டதால் தண்ணீரில் மூழ்கியவர்களில் சிலர் நீந்திக் கரைசேர்ந்தனர். 17 பேர் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.
உயிரிழந்தவர்களின் சடலங்கள், பிரேத பரிசோதனைக்காக கிண்ணியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் பழைய பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதனால் கிண்ணியா - குறிஞ்சான்குளம் பகுதிகளுக்கிடையே குறித்த படகுப்பாதை சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. தினமும் குறித்த பாதைப் படகின் ஊடாக நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பற்ற முறையில் பயணம் மேற்கொண்ட நிலையில் நேற்று இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது. (த-இ)

### வீதிகளை...

ரயர் கொளுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
குறித்த சம்பவத்துக்கு நீதிகோரியும் ஆபத்தான நிலைமையில் படகுபாதை இயக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கிண்ணியா பிரதேச செயலகத்தை மக்கள் முற்றுகையிட்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-இ)

### தௌபீக்...

மீது தாக்குதல் நடத்தி, கடும் சேதத்தை ஏற்படுத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அங்கு பாலம் அமைக்கும் பணி விவகாரத்தில் உரிய தீர்வு இல்லை என்றுகூறி ஆக்ரோசமடைந்த பொதுமக்களே, குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் வீடு புகுந்து கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் வீட்டின் பல பகுதிகளும் நொறுக்கப்பட்டுள்ளன. உடமைகளும் சிதைக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து அங்கு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். (த-இ)

### ம.வ.கானமயில்நாதனின்...

நாதனின் (வயது- 79) திருவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் நேற்று பி.ப. 3.00 மணியளவில் தீயுடன் சங்கமமானது.
சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் தனது வீட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை காலமாகியிருந்தார்.
அவரது உடல் அஞ்சலிக்காக அன்னாரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. நேற்றுக் முற்பகல் 10 மணிக்கு கிரியைகள் இடம்பெற்றன. தொடர்ந்து அவரது வீட்டில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் அவரது உடல் உதயன் பணிமனைக்கு அஞ்சலிக்காக எடுத்து வரப்பட்டிருந்தது. இதன்போது பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர். அத்துடன் இரங்கல் கூட்டமும் நடைபெற்றது. தொடர்ந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு அவரது உடல் எடுத்துச் செலப்பட்டது. அங்கு அன்னாரது உறவினர் சிதைக்கு தீ மூட்டினார். (ஒ-5)

### நினைவேந்தலை...

கோரி ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பொலிஸார் இணைந்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது. மாவீரர் நினைவேந்தலில் ஈடுபடுவதற்கு 6 பேருக்குத் தடை விதிக்கக்கோரி பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த ஊர்காவற்றறை நீதிமன்ற நீதிவான், குறித்த நிகழ்வு நடைபெறும் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை எனத் தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்கின்றேன் என்றுகூறி உத்தரவிட்டார்.
அத்துடன், அவர்கள் இலங்கையின் சட்டத்திட்டங்களை மீறுவார்களேயானால் அவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.
குறித்த வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி சிறீகாந்தா, மற்றும் சட்டத்தரணிகளான சுகாஷ், ராகினி நடராசா, வெலீனா, நிரோசன், சுதர்சினி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களும் நினைவேந்தலுக்குத் தடைவிதிக்கமுடியாது என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-20)

### நவ.27....

நவம்பர் 27ஆம் நாளில் மாவீரர்களை நினைவு கூருவது நமது கடமையாகும். இதற்கு அரசியல்வாதிகளும் அரசியல் பிரதிநிதிகளும் முன்னின்று செயற்பட வேண்டும் - என்று, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்தார்.
யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
மாவீரர்நாள் நினைவேந்தலைத்தடுக்க இலங்கை அரசு, பொலிஸார் மூலமும் படையினர் மூலமும் நீதிமன்றங்களை அணுகி வடக்கு -கிழக்கு மாகாணங்களில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்தநிலையில், தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவுகூர முற்படுகின்றார் எனக் கூறி எங்கள் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தடை உத்தரவுகளைப் பெற்றிருக்கிறார்கள். சில நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை பிறப்பிக்க மறுப்பு தெரிவித்துள்ளன.
மாவீரர் நினைவு தினங்கள் இடம்பெறும் துயிலுமில்லங்கள் தற்போது இராணுவ முற்றுகைக்குள் காணப்படுகின்றன. தீருவில் பொதுப்பூங்காவில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுமதியை வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரிடம் கேட்டிருக்கின்றோம். அந்த அனுமதி கிடைத்தவுடன் சுகாதாரத்துறையின் அனுமதியுடன் நவம்பர் 27ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.
குறிப்பாக அரசியல் செயற்பாட்டாளர்களும் அரசியல் பிரதிநிதிகளும் இதில் மௌனமாக இருக்காது துணிந்து பொது இடங்களிலும் கோவில்களிலும் அஞ்சலிசெய்ய முன்வர வேண்டும்.
தடை செய்யப்பட்ட பொருள்களை வைக்காமல் மாவீரர்களின் நினைவேந்தல் செய்வதை யாரும் தடுக்க முடியாது. குறித்த 6.05 நேரத்தை மாத்திரம் கருத்திற் கொள்ளாது நவம்பர் 27 நாளிலே மாவீரர்களை நினைவு கூருவது நமது கடமையாகும். என்றார். (த-20)

### புலிகளின்...

என்று கூறப்படும் ஒரு தொகுதி ஆயுதங்கள் நேற்று மீட்கப்பட்டன.
அங்குள்ள காணி உரிமையாளர், தென்னந்தோப்பு பகுதியை தோண்டிய போது ஆயுதங்கள் வெளிக்கிளம்பின என்றும் அவற்றை இராணுவத்தினர் மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
52 ஆவது டிவிஷன் இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த விடம் முற்றுகையிடப்பட்டது.
இதன்போது ரி-56 மகசின் 517, பைக் குண்டுகள் கிளைமோர் 3, ராக்கிங் பம்1,ரி.எம்.பி. ஜப்போஸ் 8கிலோ, அம்மான் 3,.ஆர்.பி.ஜி.1, மிதிவெடி 23, ஐ.பி.டி. 3, ராங்கிப்பம்1 என பல்வேறு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-20,159)

### புலிகளின் தலைவர்....

மன்ற உறுப்பினர் சிறீதரனிடம் வாங்கிக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
"நான் அரசுக்கு வக்காலத்து வாங்குபவன் அல்லன். அதேபோல அரசின் கால்கழுவி பிழைப்பதற்கும் நான் இங்குவரவில்லை." இவ்வாறு சபையில் நேற்று கடும் சீற்றத்தை வெளிப்படுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன்.
நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் செலவின தலைப்பு மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது.
இதில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கிளிநொச்சியில் ஞானசார தேரர் வெளியிட்டிருந்த கருத்துக்களுக்கு சபையில் பதிலடி கொடுத்தார்.
“2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் கஞ்சா என்ற சொல் வடக்கு, கிழக்கில் இருக்கவில்லை. இதை யார் கொண்டு வந்தார்கள், எவ்வாறு அங்கு தற்போது போதைப்பொருள் வருகின்றது, இதற்கான காரணம் என்ன?, ஆனால் இவற்றை கொண்டுவந்தவர்களோ, “தமிழர் அரசியல்வாதிகள் இதைப்பற்றி கதைப்பதில்லை” எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். நாங்கள் போதைப் பொருள் பாவனைக்கு எதிரானவர்கள். அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள். விடுதலைப் புலிகளின் ஆட்சிகாலத்தில் போதைப் பொருள் இருக்கவில்லை” என்றும் சிறீதரன் சுட்டிக்காட்டினார்.
இதன்போது குறுக்கீடு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,
"நீங்கள் இங்கு பல விடயங்களைப் பற்றி சொன்னீர்கள். மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற திட்டங்கள் ஊடாக பல விடயங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். அதற்கு முன்னர் ஏன் செய்யவில்லை? அதற்கு நீங்கள் இடமளிக்கவில்லை. அங்கிருந்து தடைகளைத்தான் ஏற்படுத்திக்கொண்டிருந்தீர்கள். பிரபாகாரன் போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டார் என்பது உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம் அல்லது மறைக்கலாம். எனவே, பொய்யான விடயங்களை சபையில் தெரிவிக்க வேண்டாம்." - என்றார்.
இதற்குப் பதிலடி வழங்கிய சிறீதரன், "நான் அரசுக்கு வக்காலத்து வாங்குபவன் அல்லன். பதவிகளுக்காக அரசின் கால் கழுவி பிழைக்கவும் வரவில்லை. போர்க்காலத்தில் தேசிய விடுதலைக்காக ஓர் இனம் போராடிக் கொண்டிருந்தது. இந்தநிலையில், திட்டமிட்ட அடிப்படையில் அரசுதான் பொருளாதாரத்தடை விதித்தது. பாதுகாப்பு படைகளை வைத்துக்கொண்டு கவசவாகனங்களில் திரிந்தவர்கள் அல்லர் தமிழர்கள். தங்கள் உரிமைக்காக போராடினார்கள். நீங்கள்தான் பொருள்கள் வருவதை தடுத்தீர்கள். இப்போது கூட நாம் நியாயமான தீர்வையே கேட்கின்றோம்." என்றார். (த-44)

### அதிகாரப்...

சாங்கம் இதனைத்தான் சொல்ல முற்படுகின்றது. புதிய அரசமைப்பு ஒன்று வரப் போவதில்லை. அவ்வாறு வந்தாலும் அது கடுமையான சிங்கள பௌத்த நிலைப்பாட்டில் உள்ள அரசமைப்பாகவே இருக்கும்.”
இவ்வாறு, இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மத்திய கிழக்கு, ஆசியா, மற்றும் பசுபிக் நாடுகளுக்கான அரசியல் விவகாரங்கள் திணைக்களத்தின் உதவிப் பொதுச்செயலாளர் காலித் கியாரியிடம் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு தெரிவித்துள்ளது. காலித் கியாரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று மாலை நடைபெற்றது.
கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் குழுவின் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.
கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கரும் கலந்துகொண்டார். ஒரு மணி நேரத்துக்கு இந்தச்சந்திப்பு நீண்டிருந்தது. இதன்போது புதிய அரசமைப்பு உருவாக்கம், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் நிலை, தமிழர்களின் காணி ஆக்கிரமிப்பு, ஜெனிவா தீர்மானம் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன. இலங்கையில் காணப்படும் நிலைமைகள் தொடர்பாக காலித் கியாரி எழுப்பிய சந்தேகங்களுக்கு சம்பந்தன் விளக்கமளித்தார்.
“போர் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில் தமிழ் மக்களுடைய காணிகள் பல்வேறு விதமாக சுவீகரிக்கப்படுகின்றன. வனவளத் திணைக்களம் மூலமாக, மகாவலி திட்டம் என பல்வேறு விதமாக தமிழ் மக்களுடைய காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இதன் மூலமாக தமிழ் மக்களை காணி இல்லாதவர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.
இந்தியாவுக்கு அகதிகளாகக் குடிபெயர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் திரும்பிவர முடியாமல் உள்ளனர். அவர்கள் திரும்பிவந்தாலும், குடியிருப்பதற்கு காணி இல்லாத நிலைமை இதன் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது.
ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த தீர்மானத்தால் எதுவும் நடைபெறாமலிருப்பது மக்களுக்கு கடும் அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் கொடுக்கின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். - என்று தெரிவித்தார். (த-22)

# குறிஞ்சாக்கேணி விவகாரம் நாடாளுமன்றில் எடுத்துரைப்பு

கொழும்பு, நவ. 24

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகுப் பாதை விபத்துத் தொடர்பில் நாடாளுமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அரசின் அசட்டை காரணமாகவே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. முறையான வகையில் படகுப் பாதைச் சேவை நடைபெறவில்லை என்று ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இந்த படகுப் பாதை குறித்து பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும், அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார். (ஓ-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியை அறிவிப்பேன்

## ஹரின் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான மூளையாகச் செயற்பட்ட சூத்திரதாரி யார் என்பதை விரைவில் அம்பலப்படுத்துவேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எனக்கு எதிராக சேறு பூசப்பட்டது. அதனால் தான் நான் கொழும்புக்குச் செல்ல நேரிட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயங்களுக்கு பதுளையில் இருந்து எதுவும் செய்ய முடியாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், என் மீது முன்னெடுக்கப்பட்ட பரப்புரைகளால் எனது பிள்ளை பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், இன்று என்ன நடந்தது. இந்த நாட்டுக்கு பெரிய சாபம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

எப்படியாவது உள்ளே தள்ளிவிட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தத் தாக்குதலுக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும். அதை நான் நிரூபிப்பேன். எனது மூச்சு நிற்கும் முன்னர் அதனைச் செய்வேன். என்றார். (ஓ-4)

# வலி. மேற்கு பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது



யாழ்ப்பாணம், நவ. 24

வலி. மேற்குப் பிரதேசசபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி. மேற்குப் பிரதேசசபையின் அமர்வு தவிசாளர் நடனேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. தவிசாளரால் வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. ஈ.பி.டி.பியின் சபை உறுப்பினர்கள் அமர்வுக்கு சமுகமளிக்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேட்சை உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் எதிராக வாக்களித்தார். (எ-319)


## வேலையாட்கள் தேவை

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள K.M.V.R- ஆயுர்வேத மருந்து & பான்சி கடைக்கு வேலையாட்கள் உடன் தேவை.

K.M.V.R ஆயுர்வேத மருந்து & பான்சிகடை
K.K.S. வீதி, மாவிட்டபுரம்.

076 9132049, 077 292 0394

(CR 5894) 1-6


## காணவில்லை



ஆனைக்கோட்டையைச் சேர்ந்த

**கந்தசாமி மலர்நாயகி**

(வயது-70, மனநிலை பாதிக்கப்பட்டவர்).

என்பவரை கடந்த ஒரு மாதமாக காணவில்லை.

இவரைக் கண்டவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**077 2241 791**

(CS 668) 1-6

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 09 . 11 . 1944

மறைவு 10 . 11 . 2021



கடந்த (10.11.2021) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் ஜெயக்குமாரி ஆலாலசுந்தரம்

**(ஓய்வுபெற்ற முன்பள்ளி ஆசிரியை)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.11.2021) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியமும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நண்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வண் - வடமேற்கு
பொன்னையாவீதி,
ஆனைக்கோட்டை (Post office வீதி)

குடும்பத்தினர்

(cs661) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 07 . 1945

இறப்பு 23 . 11 . 2021



## திருமதி பரமகுருநாதன் இராஜேஸ்வரி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், மூத்தவிநாயகர் வீதி 30/13 இரண்டாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமகுருநாதன் இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (23.11.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகளும், கந்தையா நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், பரமகுருநாதனின் அன்பு மனைவியும், மகாதேவன், பற்குணம், பாஸ்கரன், வசந்தினி, கிருபாகரன் காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி, சாந்தகுமாரி, அருள்மொழி, கீத்தா காலஞ்சென்ற இராசையா மற்றும் தர்மதயாளன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சத்தியதேவி, காலஞ்சென்றவர்களான பூபாலன், தனஞ்செயன் மற்றும் விஜயரத்தினம், சாம்பசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், அருந்தவநாதன், சீவரத்தினம் மற்றும் மனோகரமாலா, காந்திமதி, ராஜசிறி ஆகியோரின் மைத்துனியும், சைலஜா, கீர்த்தனா, துவாகரன், சாருகா, திவ்வியா, றேபேக்கா, வினோத், வினித், அபிஷா, திகம்பரன், திருமகள், சாயீசன், உமாரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ருத்விகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/13, இரண்டாம் ஒழுங்கை,
மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

தகவல் : குடும்பத்தினர்
துவா : 076 615 4777
வசந்தி : 077 124 9118

(CS 663) (3/6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.